Summer schools

* 48 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the University Grants Commission has sponsored summer schools in this State in this year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) சென்னைப் பல்கலைக் கழக வட்டாரத்தில் ஒன்பது கோடைக்காலப் பயிற்சி நிலையங்களும், மதுரைப் பல்கலைக் கழக வட்டாரத்தில் நான்கு நிலையங்களும் பல்கலைக் கழக மான்யக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு நடத்தப் பட்டன.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தினால் இப்படிப்பட்ட கோடைக்காலப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுவதைப்போல பள்ளிகளிலும் நடத்துவதற்கு அரசுக்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு பல்கலைக்கழகத்தைப் பொருத்துத்தான் பயிற்சி வகுப்பை நடத்தும். அந்த வகையில் சென்னைப் பல்கலைக்கழக வட்டாரத்தில் ஒன்பது கோடைக்காலப் பயிற்சி நிலையங்களும், மதுரைப் பல்கலைக் கழக வட்டாரத்தில் நான்கு நிலையங்களும் நடத்தப்பட்டன. ஆனால், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் துவக்கப் பள்ளிகளைப் பொருத்து, இந்த மாநில அரசே ஆங்காங்கு கோடை காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றது. ஆகவே, பல்கலைக் கழக மானியக் குழு பள்ளிகளைப் பொறுத்து பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாது. கல்லூரியைப் பொறுத்துத்தான் அது பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, இப்படி நடத்தப்படுகிற கோடைக்காலப் பயிற்சி நிலையங்களில் எந்த எந்தத் துறைகளில் பயிற்சி அளிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதன் விவரம் பின்வருமாறு:—

(1) Summer Institute in Physics (Special) (All-India Institute) at the A.C. College of Technology, Madras;

(2) Summer Institute in Micro and Semi-micro analysis (All-India Institute) at the A.C. College of Technology, Madras;

(3) Summer Institute in Mathematics (All-India Institute) at the Ramanujam Institute for advanced study in Mathematics (i.e., Department of Mathematics of the University);

(4) Summer Institute in Mathematics for school teachers at Sri Pushpam College, Poondi;

(5) Summer Institute in Biology for school teachers at the Madras Christian College, Tambaram;

(6) Summer Institute in Physics for school teachers at St. Joseph's College, Tiruchirappalli;

(7) Summer Institute in Chemistry for school teachers at Pachaiyappa's College, Madras;

(8) Summer Institute in Biology for school teachers at Jamal Mohammed College, Tiruchirappalli; and

(9) Summer Institute in Physics for school teachers at the Madras Christian College, Tambaram.

மேற்கண்ட கோடை கால பயிற்சி நிலையங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக மானியக் குழுவினால் 1971-72-ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்குமுத்து தேவர் அவர்கள் முதலில் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில், பள்ளி ஆசிரியர்களுக்கும் சேர்த்து இந்தப் பயிற்சி வகுப்பு மேற்கண்ட ஒரு சில இடங்களில் நடத்தி வருகிறார்கள் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether when such summer schools are conducted the same teachers will be appointed or specialists appointed and paid specially?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வேலை பார்த்து வருகின்ற ஆசிரியர்களுக்குத்தான் மேலும் பயிற்சி அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே வேலையில் இருக்கிறவர்களுக்குத்தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி மாணவிகள் வேலை நிறுத்தம்

* 49. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 12-7-71 அன்று வாலாஜா அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் மாணவிகள் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விடுதித் துணைக் காப்பாளரின் மாற்றுதலை எதிர்த்து விடுதி மாணவிகள் வகுப்புக்குச் செல்ல மறுத்தனர். விடுதித் துணைக் காப்பாளர் பதவி உயர்வில் மாற்றுதலாகியுள்ளார் என்பது மாணவிகளுக்கு விளக்கப்பட்ட பின் அவர்கள் அமைதியாக வகுப்புக்குச் சென்றனர்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி பெண்கள் கல்லூரிகளிலும் வேலை நிறுத்தம் செய்கின்ற பழக்கம் வந்துவிட்டதன் காரணமாக சிறுசிறு காரணங்களுக்கெல்லாம் இப்பொழுது வேலை நிறுத்தம் என்று வருகின்ற நிலையைப் போக்குவதற்கும் கல்லூரிகளில் அமைதி, ஒழுக்கம் ஆகியவை நிலவ வேண்டும் என்பதைக் கருதியும் மாணவ மாணவியர் இனிமேல் ஸ்ட்ரைக் செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?